# <u>யாழ் மாவட்டத்தில் ஆக்கிரமிப்புப் பீடையான தக்காளி இலை மற்றும் காய் சுரங்க மறுப்பியின் தாக்கம்</u>

யாழ் மாவட்டத்தில் தெல்லிப்பளை, பன்னாலை, அளவெட்டி, அச்சுவேலி, கோப்பாய் பிரதேசங்களில் தக்காளிச் செய்கையில் ஆக்கிரமிப்பு பீடையான இலை மற்றும் காய் சுரங்க மறுப்பியின் தாக்கமானது அறுவடை நிலையில் அதிகளவில் அவதானிக்க முடிகிறது.

இப்பீடையானது இலத்தீன் அமெரிக்கா, ஐரோப்பியா, வட ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஏனைய நாடுகளுக்கு பரலடைந்துள்ளது. இப்பீடையின் விஞ்ஞானப் பெயர் ரியுடா அப்சோலுடா (***<u>Tuta absoluta</u>*** )ஆகும். இது லெபிரோப்டரா (Lepidoptera) வர்ணத்தைச் சார்ந்த அந்துப் பூச்சி ஆகும்.





### ரியுடா அப்சோலுடா (***<u>Tuta absoluta</u>*** ) அந்தின் வாழ்க்கை வட்டம்

இவ் அந்துப்பூச்சி இரவில் சுறுசுறுப்பாக நடமாடும் அதே நேரம் பகல் வேளைகளில் இலைகளிற்கிடையில் மறைந்து காணப்படும். இதன் வாழ்க்கை வட்டத்தில் முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி என்னும் 4 வளர்ச்சிப்பருவங்களை கொண்டது. இதனுடைய வாழ்க்கை வட்டம் 30-35 நாட்கள். எனவே ஒரு வருடத்தில் 10-12 சந்ததிகளை உருவாக்கும்.

வாழ்க்கைக் காலத்தில் ஒரு பெண் அந்துப்புச்சி 250-260 முட்டைகளை இலையின் கீழ்ப்பரப்பிலும், தண்டுப்பகுதியிலும் இடும். இம்முட்டைகள் சிறிய 0.35மில்லி மீற்றர் அளவுடைய மஞ்சள் வெள்ளை நிறமுடையது. 4-6 நாட்களில் முட்டை பொரிக்கும்.

குடம்பியின் தலை கடுமையான நிறமாகவும் , துண்டம் பச்சையிலிருந்து இளம் ரோஸ் நிறத்திலும் காணப்படும். முதலாவது துண்டப்பகுதியில் அவதானிக்க்கூடியவாறான கடும் நிறத்திலான வளையம் காணப்படும். வெற்றுக்கண்ணினால் அவதானிப்பது கடினம்.



கூட்டுப்புழு இளம் கபிலம் நிறத்திலும் காணப்படும். 6 மில்லிமீற்றர் நீளமானது. 12-15 நாட்களில் குடம்பியானது கூட்டுப்புழுவாக மாற்றமடையும். கூட்டுப்புழு மண்ணில் அல்லது இலையின் சுருண்ட பகுதியில் அல்லது இலையின் சுரங்கத்தில் காணப்படும். குடம்பியானது நிறையுடலியாக மாறும் செயற்பாடானது காலநிலையில் தங்கியிருக்கும்.

நிறையுடலி 6 மில்லிமீற்றர் நீளமுடையது. விரிந்த நிலையில் 10 மில்லிமீற்றர் நீளமுடையதாகவும் காணப்படும். வெள்ளி கலந்த கபில நிறமானமானதும் , கறுப்பு நிறப்புள்ளிகளையுடையதும் , பளபளக்கும் தன்மையுடையதுமாகும்.




**ரியுடா அப்சோலுடா (*Tuta absoluta*) அந்தின் தாக்கத்தை அடையாளம் காணல்**

தக்காளிக் குடும்பத்தின் அனைத்துப்பகுதியையும் தாக்கக்கூடியது. குடம்பிப் புழுக்களின் எல்லா நிலையகளிலும் தாக்கத்தை ஏற்படுத்ததும். இலைகளின் மேற்பரப்பை சுரண்டி சுரங்கம் ஆக்கி உட்பகுதியில் உள்ள இழையங்களை உண்ணும். இதனால் இலையின் மேற்பரப்பில் ஒழுங்கற்ற வெள்ளை நிறக்கோடுகள் காணப்படும். இவை ஒருங்கிணைந்து இலைகள் கருகின தோற்றத்தில் சுருண்டு காணப்படும். அத்துடன் காய்கள் ,பழங்களும் பாதிக்கப்படும். பழங்களில் சிறு கோடு மற்றும் சிறு புள்ளி போன்ற அடையாளங்கள் காணப்படும். இப் புழுவானது பழங்களின் மேற்புறத்தோலில் உட்புறமாக காணப்படும். இதனது .இரண்டாம் நிலைத்தாக்கமாக பங்கஸினால் பழங்கள் அழுகிக் காணப்படும். இதன்காரணமாக தக்காளிப் பழத்தின் தரத்திலும் விளைச்சலிலும் பாதிப்பை ஏற்படுத்தும். அத்துடன் சந்தைமானம் குறைவடைகின்றது.

**ரியுடா அப்சோலுடா (*Tuta absoluta* ) அந்தின் தாக்கத்தை முகாமைத்துவம் செய்தல்**

ரியுற்றா அப்லுட்டா இலைச்சுரங்க மறுப்பியினை கட்டுப்படுத்தல் மிகவும் சவாலான ஒரு விடயமாகும். இவ் அந்தினை இராசயனங்களைப் பயன்படுத்தி வினைத்திறனாகக் கட்டுப்படுத்த முடியாது. ஏனெனில் விரைவாக தனது புதிய சந்ததியினைப் பெருக்குவதனால் இரசாயனங்களிற்கு எதிர்ப்பான குல வகைகள் உருவாகின்றன. எனவே ஒருங்கிணைந்த பீடைமுகாமைத்துவம் ஊடாகவே இதனை கட்டுப்படுத்தமுடியும

- வயற்சுகாதாரத்தைப் பேணல்.
- பாதிப்படைந்த தாவரப்பகுதிகளை அகற்றி எரித்தல்.
- அறுவடை முடிந்த பயிர்களையும் உடனடியாகப் பிடுங்கி அகற்றல்
- வெள்ளை நிறமான ஒளிப்பொறி பயன்படுத்தல் - வெள்ளை ஒளி ஒளிரக்கூடிய மின் விளக்குகளை வயல்களில் ஆங்காங்கே தொட்டம் தொட்டமாக வைத்தலும் மற்றின் அவற்றின் அடிப்பகுதியில் நீர்கொண்ட அல்லது கிறீஸ் பூசிய அகன்ற வாயுள்ள பாத்திரத்தை வைத்தல்.
- அந்தைக் கவரும் இனக்கவர்ச்சிப் பொறியினைப் பயன்படுத்தல்
- வேப்பெண்ணெயினைப் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு விசிறுதல்
- ஒரே குடும்பத்தாவரங்களான (solanasia) கத்தரி தக்காளி மிளகாய் உருளை போன்றவற்றை தொடர்ந்து பயிரிடுதலை தவிர்த்து தானியப் பயிர்களை சுழற்சி முறையில் மேற்கொள்ளல்.

இது தொடர்பான மேலதிகமான தாக்கத்தை அவதானிக்கும் போது விவசாய போதனாசிரியர்களுடன் அல்லது யாழ்மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அலுவலகம், திருநெல்வேலியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்

திருமதி.அ.சிறிரங்கன்

பிரதி மாகாண விவசாய பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

திரு.நா.நிரஞ்சன்குமார்

பாடவிதான உத்தியோகத்தர்
(பயிர் பாதுகாப்பு)